பொது சன நூலகம்
12 JUN 2000

பக்கங்கள் ஆறு

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா 5-00

சுடர்: வள்ளுவர் ஆண்டு 2031 வைகாசி 28 சனிக்கிழமை (10-06-2000) VALAMPURI ஒலி: 173

★ யாழ்குடாவில் அமைதிக்குப் பின்

# இராணுவத்திற்கும் புலிகளுக்கும் இடையே கடும் சண்டை மூண்டது!

## இரு இராணுவம் பலி 12 பேர் காயமென அரசு தகவல்

[யாழ்ப்பாணம்]

இலங்கை இராணுவத்தினருக்கும், விடுதலைப்புலிகளுக்குமிடையே கடந்த ஒருவார காலமாக ஓய்ந்திருந்த சண்டை நேற்று மீண்டும் சாவகச்சேரி சரசாலைப்பகுதியில் மூண்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன

இதேவேளை விடுதலைப்புலிகள் மீது இராணுவம் மேற்கொண்டுள்ள தாக்குதல்கள் குறித்து அரசாங்க அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் ஒரு வார காலமாக ஓய்ந்திருந்த சண்டை மீண்டும் நேற்று ஆரம்பித்துள்ளதாக கடைசியாக வெளியிடப்பட்டுள்ள அரச அறிக்கை ஒன்று தெரிவித்துள்ளது.

சாவகச்சேரிப்பகுதியிலும் சரசாலையிலும் புலிகளுக்கு எதிராகஇராணுவம்மேற்கொண்டுள்ள இராணுவநடவடிக்கையை அடுத்து இருசாராருக்கும் இடையே பெரும் மோதல் வெடித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இம்மோதல்களின் போது இராணுவத்திற்குத் துணையாக விமானப்படையினரின் கிபிர் விமானக் குண்டுவீச்சுக்களும் பீரங்கிப்படையினரும் உதவிவழங்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இம்மோதல்களின் போது இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுத் தேர்தல் உரிய வேளையில் நடைபெறும்; அச்சம் தேவையில்லை

### பிரதிப் பாதுகாப்பு அமைச்சர்

(கொழும்பு)

உரிய காலத்தில் நீதியாகவும் நேர்மையான முறையில் பொதுத்தேர்தல் நடைபெறும் அது குறித்து எவரும் குறிப்பாக எதிரணியினர் அச்சம் கொள்ளத் தேவையில்லை என நீர்ப்பாசன மின்சக்தி அமைச்சரும் பிரதி பாதுகாப்பு அமைச்சருமான ஜெனரல் அனுருத்தரத்வத்த தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் அவசர காலச்சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிக்கும் பிரேரணை மீது உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார். (க)

## அமைச்சரின் இறுதிக் கிரியைகள் இன்று

(கொழும்பு)

குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் சி.வி. குணரத்தினாவினதும் அவரது மனைவியினதும் இறுதிக் கிரியைகள் இன்று அரச மரியாதையுடன் தெகிவளையில் அமைந்துள்ள அலன் அவென்யூவில் நடைபெறவுள்ளது.

இன்று காலை இவர்களது

[6ஆம் பக்கம் பார்க்க]

## இன்று மதுபானக் கடைகள் பூட்டு

(கொழும்பு)

இரத்மலானைக்குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட அமைச்சர் சி.வி குணரத்தினாவின் இறுதிக்கிரியைகளை ஒட்டி இன்று கொழும்பு மாவட்டத்தில் உள்ள சகல மதுபானக் கடைகளும், இறைச்சிக்கடைகளும் மூடப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## ஊரடங்கு அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதேச செயலர் பிரிவில் அமுல் படுத்தப்பட்டிருக்கும் ஊரடங்குச் சட்டம் இன்று காலை 7.00 மணியிலிருந்து பிற்பகல் 4.00 மணி வரை தளர்த்தப்பட்டிருக்கும்.

யாழ். பிரதேச செயலர் பிரிவு தவிர்ந்த யாழ் குடா நாட்டின் தீவுப்பகுதி உட்பட ஏனைய பகுதிகளில் இன்று அதிகாலை 5 மணிக்கு ஊரடங்கு தளர்த்தப்பட்டுமீண்டும் இன்று இரவு ஏழு மணிக்கு அமுல் படுத்தப்படும் என்று யாழ். பாதுகாப்பு நடவடிக்கைத்தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது. [க-வ]

## வயோதிப மாது பலி

[யாழ்ப்பாணம்]

கொடிகாமம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு (கடந்த8ஆம்திகதி) வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் 77வயது மூதாட்டி ஒருவர் மரணமானார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நாளை இறுதிக் கிரியை

[கொழும்பு]

குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட தெஹிவளை பிரதி நகர பிதா அநுரா சில்வாவின் இறுதிக்கிரியைகள் நாளை இரத்மலானையில் நடைபெறவுள்ளது. [வ]

## மொறட்டுவ பல்கலை மாணவர்கள் 55பேர் விடுதலை 5பேர் தடுத்துவைப்பு

(கொழும்பு)

அமைச்சர் சி. வி. குணரத்தினாவின் கொலை சம்பந்தமாக சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்ட மொறட்டுவ பல்கலைக்கழக மாணவர்கள் 60 பேரில் 55 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் ஐந்து சந்தேகநபர்களும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க ஏற்பாடு

(கொழும்பு)

இரத்மலானை குண்டுத் தாக்குதலில் பலியானோரின் குடும்பங்களுக்கு முற்பணமாக 50 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது. அவர்களின் இறுதிக்கிரியைகளுக்காக பத்தாயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## குடும்பப் பெண் பலியானார்

(ஆவரங்கால்)

புத்தூர் சிவன்கோயிலுக்குப் பின்பக்கமாக உள்ள மரத்தில் மோதிய ஷெல் வெடித்ததில் அவ் வழியால் வந்து கொண்டிருந்த குடும்பப் பெண் ஒருவர் உடல் சிதறிப் பலியானார்.

இதில் அவ்விடத்தைச்

[6ஆம் பக்கம்பார்க்க]

## அமைச்சர் சி. வி. குணரத்தினாவின் மறைவு நாட்டிற்கு பேரிழப்பு

[கொழும்பு]

குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட அமைச்சர் சி. வி. குணரத்தினாவின் குடும்பத்தவருக்கு பிரதம மந்திரி சிறிமாவோ பண்டாரநாயக்க அனுதாபம் தெரிவித்துள்ளார்.

பிரதம மந்திரி தனது

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தடுத்து வைக்கப்பட்ட இளைஞர் பிணையில் செல்ல நீதவான் உத்தரவு

புலோலி)

நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்திற்காக தடுத்து வைக்கப்பட்டிருந்த புலோலி இளைஞன் பத்மநாதன் கொலைவழக்குச் சந்தேகநபரை 10,000 ரூபா காசுப் பிணையிலும் இரு ஆள்கள் பிணையிலும் செல்லுமாறு

[6ஆம் பக்கம் பார்க்க]

# தனிநாட்டுக்கோரிக்கைக்கு நிகரான மாற்றுத்திட்டம் அவசியம் தேவை

### இரா, சம்பந்தன் எம். பி.

(கொழும்பு)

யாழ்.குடா நாட்டில் உள்ள ஐந்து இலட்சம் மக்களைக் கருத்தில்க் கொண்டு மோதலை முடிவுக்குக் கொண்டு வரும் முகமாக சர்வதேச சமூகம் தலையிட வேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

அவசர காலச் சட்டநீடிப்பு பிரேரணை மீதான விவாதத்தில் பேசிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர தேவையான சகல நடவடிக்கைகளையும் எடுக்குமாறு அரசாங்கத்தைக் கேட்டுக் கெண்டார்,

சர்வதேச சமூகம் அரசியல் தீர்வை வலியுறுத்துகின்றது. அண்மையில் இலங்கை வந்த அமெரிக்க பிரதி இராஜாங்க அமைச்சர் தோமஸ் பிக்கட்றிங்கும் அதிகளவு அதிகார

(6ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

அச்செழு, நீர்வேலியைச் சேர்ந்த இராசையா அரிச்சந்திரநாதன் ஆகிய எனது தே. அ. அ. இல ;-512970346V வி.அ.அ.இல :-0903032122 மருதனார் மடம் சந்திக்கும் மருதடிப்பிள்ளையார் கோயிலுக்கும் இடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மானிப்பாய் வடக்கு கிராம அலுவலர் சி.சிவகுமார் J/137 அவர்களிடம் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(862)

## தவறிவிட்டது

கச்சேரி நல்லூர் வீதியைச் சேர்ந்த தம்பிராசா கார்த்திகா ஆகிய எனது அடையாள அட்டைகள் வி. அ. அ. இல 0902006000 ஆறுகால் மடத்துக்கும் ஆனைக்கோட்டை பிடாரி அம்மன் கோயிலுக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் வலம்புரிக் காரியாலயத்தில் அல்லது ஆறுகால்மடம் கண்ணன்மதி மயிலுவீதி என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

(863)

## விற்பனைக்குண்டு

கறவைப் பசு விற்பனைக்குண்டு (ஜேசி) கன்று ஈன்று 2 கிழமை டேவிற் பரியோவான் தேவாலயம் பிரதான வீதி சுண்டிக்குழி.

(864)

## இறைச்சிக் கோழி

கல்பேட்ஸ் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்தல் இலவசம். தொடர்பு -31, மான்ஸ், பாடசாலை வீதி, உடுவில் சுன்னாகம். (கண்ணா வீடியோ சென்ரர் வளவு) (671)

## இறைச்சிக் கோழி விற்பனை

Broiler, Cullbirds, Cockerels இறைச்சிக்கோழிகள் சுத்தம்செய்து [பாதிக்கோழி உட்பட] தினமும் பெற்றுகொள்ளலாம். 19, மருதேசர் ஒழுங்கை [நல்லூர் வீடியோ சென்ரர் ஒழுங்கை]முத்திரைச் சந்தையடி நல்லூர்.

[747]

## ஆங்கிலம் விசேடமாக

O/LDistinction, Credit G.A.Q A/L 2002 ஆங்கிலம்(O/Lகணிதம் உட்பட) கற்பிக்கப்படும். B.Sc (Cey) 85, சிவன் கோவிலடி, சிவன் கோவில்பின்புறம், திருநெல்வேலி. [822]

## ஆங்கிலக் கல்வி

நல்லூர், திருநெல்வேலிக்கு உட்பட்ட இடங்களில் வீடுகளுக்கு வந்து ஆண்டு 6 முதல் 11 வரை ஆங்கிலம் கற்பிக்கப்படும், இப்பாடத்தில் உரிய தேர்ச்சியற்றவர்களுக்கு ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும். நேரில் உடன்சந்திக்கவும் 50/33 செட்டித்தெரு நல்லூர்.

(721)

## தவறிவிட்டது

"சிக்கோ" லேடிஸ் கைக் கடிகாரம் ஒன்று 6-6-2000 அன்று மல்லாகம் பழம் பிள்ளையார் கோவிலுக்கும், கோண்டாவில் உப்புமடம் பிள்ளையார் கோவில் சந்திக்குமிடையில் தவறிவிட்டது.

கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கா.குமாரி, பொற்பதிவீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில் எனும் முகவரியில் ஒப்படைக்கவும்

## இராமநாதன் நுண்கலைக்கழக சகல மாணவர்களுக்குமான அறிவித்தல்

08-06-2000 அன்று நடைபெற்ற கலந்துரையாடலிற்கு அமையச் சகல வருட நுண்கலைத்துறை மாணவர்களும் விரிவுரைகளிற்கு எதிர்வரும் 12-06-2000 (திங்கட்கிழமை) முதல் சமுகமளிப்பதென அனைத்து மாணவர்களினாலும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. என்பதனை அறியத்தருவதுடன், அனைத்து மாணவர்களும் விரிவுரைக்குச் சமுகம் தரும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

''கவின் கலை மன்றம்''
இராமநாதன் நுண்கலைக் கழகம்,
யாழ். பல்கலைக்கழகம்.

(855)

## CANON PHOTO COPIER

கனன் நிழற்பிரதி இயந்திரங்களைப்பாவிப்போரிடமிருந்து அவற்றின் கீழ்வரும் விபரங்கள் கோரப்படுகின்றன.

மாதிரி தொடர் இல, கொள்வனவு செய்த திகதி உரிமையாளர் பெயரும், முகவரியும்.

மேற்படி விபரங்கள் யாழ்.நகரில் இவற்றின் பராமரிப்பு சேவையை வழங்குவதற்கு கனன் இயந்திரங்களின் இலங்கைக்கான விநியோகஸ்தர்களான்மெற்ரோபொலிற்றன்ஏஜென்சிஸ்தாபனத்தார்கோரியுள்ளனர்.

விபரங்களை விரைவில் கீழ்வரும்விலாசத்திற்கு அனுப்பி உதவுமாறு வேண்டுகின்றோம்.

பொது முகாமையாளர்
யுரோவில் எலக்ரோனிக்ஸ் (த்வது)வ. து
51,யமுனா வீதி,
நல்லூர்,யாழ்ப்பாணம்.

[860]

## JAFFNA COMPUTER COLLEGE

MAIN STREET CHANKANAI

யாழ் கணனிக் கல்லூரி

### THE FOLLOWING COURSES COMMENCES ON 15-6-2K

1. N. C. C. A (Instead Of 10-6-2K) AT 9AM
2. DiPloma in Ms Office (Word, Excel, Access & Power point) AT 11 AM
3. Children Programming AT 2PM
4. Diploma in Computer Programming (During Week End)

REGISTATION FEES Rs 250/- ONLY
REBATE OF 50% FOR EACH COURSES DUE TO THE PRESENT SITUATION
&
ACCADAMIC SERVICES (TYPING, TRANSLATION, PREPARING, AFFIDAVIT & COMPUTER PRINTING)

PROJECT MANAGER
J. C. C.

(838)

## மக்கள்வங்கி அறிவித்தல்

### மக்கள் வங்கி சாவகச்சேரி கிளை

மேற்படி கிளை தற்பொழுது யாழ். கன்னாதிட்டியிலுள்ள பிராந்திய தலைமைக் காரியாலய கட்டடத்தில் இயங்குகின்றது என்பதை ஏற்கனவே வாடிக்கையாளர்களுக்கு அறியத்தந்துள்ளோம். இக் கிளையின் செயற்பாடுகள் மேலும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

கணக்குகளிலிருந்து பணம் மீளப் பெறுதல்

காசோலைகள், வெளிநாட்டு உண்டியல்கள் மாற்றுதல்

காசோலைகள் சேகரித்தல்- புதிய கணக்குகள் ஆரம்பித்தல் போன்ற செயற்பாடுகள்யாவும் வழமைபோல் நடைபெறும்.

நடைமுறைக் கணக்கு வாடிக்கையாளர்கள் தமது காசோலைகளுக்கு கொடுப்பனவை நிறுத்துமாறு வங்கிக்கு முன்னர் அறிவித்திருப்பின் அவ் அறிவித்தல்கள் யாவும் இரத்துச் செய்யப்பட்டதாகக் கருதுமாறும், முன்பு அல்லது தற்போது ஏதாவது காசோலைகளுக்கு கொடுப்பனவை நிறுத்த வேண்டுமாயின் அதுபற்றிய அறிவித்தலை எமக்கு உடன் நேரிலோ அல்லது தபால் மூலமோ 13-06-2000 திகதிக்கு முன் அறியத்தருமாறும் கேட்டுக் கொள்கிறோம்.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி,
பிராந்திய காரியாலயம்
யாழ்ப்பாணம்.

(கி-464)

## இலங்கை வங்கி அறிவித்தல்!

எமது சாவகச்சேரி இலங்கை வங்கியின் வாடிக்கையாளருக்கு உதவும் நோக்குடன் கீழ்க்காணும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்பதை இத்தால தெரியப்படுத்துகின்றோம்.

1) இலங்கை வங்கி பருத்தித்துறைக் கிளையின் அருகே சாவகச்சேரி வாடிக்கையாளருக்கான ஒரு கருமபீடம் இயங்குகின்றது இக் கருமபீடத்தில் சாவகச்சேரி கிளையில் ஓய்வூதியம் பெறுவோர் தமது ஓய்வூதியத்தைப் பெறலாம்.
2) மேலும் தமது கணக்கில் பணம் மீளப்பெற விரும்புவோர் பருத்தித்துறை கரும பீடத்தில் கடமையாற்றும் முகாமையாளருடன் தொடர்புகொள்ளவும்.

இது தவிர இடம்பெயர்ந்த வாடிக்கையாளர்கள் தாம் வசிக்கும் இப்போதைய இடத்துக்குச் சமீபமாக உள்ள இலங்கை வங்கிக் கிளையிலும் ஓய்வூதியத்தை மட்டும் பெற்றுக் கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது.

பிரதேச முகாமையாளர்
இலங்கை வங்கி
யாழ்ப்பாணம்.

சி.46?

## அளவெட்டி மல்லாகம் ப. நோ. கூ. சங்கம் (வ. து)

### கிராமிய வங்கியின் 31-3-2000மீதிகளை உறுதிப்படுத்தல்

மேற்படி சங்கத்தின் 1999 / 2000க்கான வருடாந்த கணக்காய்வு நடைபெறுவதால் கிராமியவங்கி வாடிக்கையாளர்கள் 30-6-2000ஆம் திகதிக்கு முன் சங்க காரியாலய நேரத்தில் தங்களின் புத்தக மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

பொதுமுகாமையாளர்
அளவெட்டி மல்லாகம் ப. நோ. கூ. சங்கம்.

(கி 465)

## அபிவிருத்தி உதவியாளர்களுக்கான முக்கிய கலந்துரையாடல்

உள்ளூராட்சி திணைக்களங்களில் கடமையாற்றும் அபிவிருத்தி உதவியாளர்களுக்கான கலந்துரையாடல் ஞாயிறு (11-06-2000) காலை 11-00 மணிக்கு யாழ் மாநகர சபை அலுவலகத்தில் இடம் பெறும்,

(866) R-அறிவரசன் S. ரமேஷ்

## தேடுகின்றோம்

சித்திவிநாயகர் கோயில் நாவற்குழி கைதடியைச் சேர்ந்த செ. குமாரசாமி என்பவரையும் அதே இடத்தைச் சேர்ந்த கு. கோப்பெருந்தேவி (விரிவுரையாளர் வவுனியா) என்பவரையும் சி. சிவானந்தராஜா தேடுகின்றார்.

தேடுகின்றவர் முகவரி:
சி. சிவானந்தராஜா
அங்களப்பாய்
இணுவில் கிழக்கு

## புவியியல்

### யாழ். பிரபல ஆசிரியர் S. ராஜா

A/L 2000 துரித மீட்டல் வினாவிடை வகுப்பு
திங்கள் - வெள்ளி 10 – 12
A/L 2001, 2002 நடைபெறுகிறது.

சயன்ஸ் சென்ரர்
கொக்குவில் மேற்கு,
கேணியடி.

[861]

## வெளிவந்துவிட்டது

### A/L, G. A. Q அளவையியல் மாணவர்களுக்குரிய ஊடக அனுமானம் ஓர் அறிமுகம்

காலச் சூழ் நிலைக்கு ஏற்ப ஒரு கப் ஐஸ்கிறீம் விலையே
ஆசிரியர் வே. யுகபாலசிங்கம்
எல்லாப் புத்தகக் கடைகளிலும் கிடைக்கும்.

(847)

## தற்காலிக இடமாற்றம்

### ஜி. எஸ். லிங்கநாதன் அன்கோ பிடவை வியாபாரம்

சங்கானை பிரதான வீதியில் (தபால் கந்தோர் அருகாமையில்) தொடர்ந்து இயங்குகின்றது.

[868] ஜி. எஸ். லிங்கநாதன் அன்கோ

## இலங்கை ஆசிரியர் சங்கம்
யாழ். மாவட்டக் கிளை
## (வடமாகாண ஆசிரியர் சங்கம்)

அவசர நிர்வாகசபைக் கூட்டம்

மேற்படி கூட்டம் 11-06 2000 (ஞாயிறு) காலை 10.00 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரியில் நடைபெறும். அனைத்து நிர்வாக சபை உறுப்பினரும் தோழமையுடன் அழைக்கப்படுகின்றனர்.

கலட்டி ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

சா. தியாகலிங்கம்
தலைவர்

(835)

## தேடுகின்றோம்

1) திருபதி. சரஸ்வதி வேலுப்பிள்ளை கல்வயல்.
2) திரு. K. சபாபதிப்பிள்ளை கற்சுளிலேன், சாவகச்சேரி.
(3) திரு K நவரட்ணம் P. M Chava Apo
(4) திரு. T அகஸ்தியர்
(5) திரு T. இராசலிங்கம் கண்டி வீதி, சாவகச்சேரி.

Lion Dr. S. அருளானந்தம்
C/O Dr- R. சுப்பிரமணியம்.
396 (570) K. K. S வீதி,
யாழ்ப்பாணம்.
அல்லது, ஸ்ரீரங்கம். வெட்டு கிழக்கு,
வட்டுக்கோட்டை.

(836) T. p. 3359

## வைத்தியலிங்கம் சக நிறுவனம்

உங்களுக்கு தேவையான கட்டடப் பொருட்கள், லாண்ட் மாஸ்ரர், ரக்ரர் உதிரிப்பாகங்கள் மற்றும் சகல விதமான ரேசர்(போல் பெயறிங்)வகைகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

வைத்தியலிங்கம் சக நிறுவனம்,
துணைவிச்சந்தி,
சங்கரத்தை
வட்டுக்கோட்டை.

(852)

## இடம் மாற்றம்

91/1, மின்சார நிலைய வீதியில் இயங்கி வந்த
**மேர்வின்ஸ் ஸ்தாபனத்தார்**
தற்பொழுது தற்காலிகமாக
**மானிப்பாய் அந்தோனியார் கோவில்**
முன்பாக இயங்குகிறது. என்பதை எமது வாடிக்கையாளர்கட்கு அறியத்தருகிறோம்.

(728) மேர்வின்ஸ்.

## தேடுகிறோம்

சிறுவிளான் இளவாலையைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி சல்வயலை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பாலசுப்பிரமணியம் குடும்பத்தினரைத் தேடுகின்றோம், விபரம் அறிந்தோர் தகவல் தரவும்.

தகவல் தரவேண்டிய முகவரி
க. நித்தியானந்தம்
லோட்டன் றோட்,
மானிப்பாய்.

(849)

## மல்லாகம் மகா வித்தியாலயம்

ஆசிரிய சேவையில் 24 வருட நிறைவுடன்
ஓய்வுபெறும்
**திருமதி லீலாவதி இராசேந்திரம்**
அவர்களை
# வாழ்த்துகிறோம்

எமது பாடசாலையில் 15 வருடங்கள் ஆசிரியராகச் சேவையாற்றி இன்று(10-06-2000ல்) ஓய்வு பெறுகின்றதங்களை பல்லாண்டு காலம் இனிது வாழ்கவெனபாராட்டி வாழ்த்துகின்றோம்.

நன்றி

பாடசாலைக் கல்விச் சமூகம்
யா மல்லாகம் ம. வி.

(845)

## கல்லூரி அதிபர் வேண்டுகோள்

[யாழ்ப்பாணம்]

யாழ். நாயன்மார்கட்டு மமேஸ்வரி வித்தியாசாலை எதிர்வரும் 12 ஆம் திகதி திங்கள் முதல் கொக்குவில் ஞான பண்டித வித்தியாசாலையில் இயங்க உள்ளது.

ஆசிரியர்கள், மாணவர்கள் தவாறு சமுகம் தருமாறு கல்லூரி அதிபர் க. சண்முகலிங்கம் தெரிவித்துள்ளார். [க]

## போதனாசிரியர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.00மணியளவில் தொலைக் கல்வி பயிற்சி ஆசிரியர்களையும், போதனாசிரியர்களையும் யாழ் இந்துக் கல்லூரியில் சமுகமளிக்குமாறு சிரேஷ்ட போதனாசிரியர் கேட்டுக் கொள்கின்றார். [க]

## திருத்தம்

7 ஆம் திகதி வலம்புரியில் வெளியான தேடுகின்றேன் என்ற தலைப்பில் வெளியான விளம்பரத்தில் (இல 761) ஐ. சீலரத்தினம் என்று பிரசுரிக்கப்பட்டதைத் தயவு செய்து ஐ. சீவரத்தினம் எனத் திருத்திவாசிக்கவும். (ஆ-ர்)

## ரஷ்யாவைக் காண விருப்பம்.

(மாஸ்கோ)

அமெரிக்க அதிபர் பில் கிளிங்டன் ஏவுகணை தடுப்பு கவசம் ஏற்படுத்தும் அமைப்பதான அமெரிக்க திட்டம் பற்றி ரஷ்யா கொண்டிருக்கும் அச்சத்தை அகற்றிவிட்டார்.

மாஸ்கோவில் நாடாளுமன்றப் பிரதிநிதிகள் மத்தியில் உரையாற்றிய பில் கிளிங்டன் வலுவான வளமான ரஷ்யாவைத் தான் காணவிரும்புவதாகக் கூறினார்.

உலக வர்த்தக ஸ்தாபனத்தில் சேரும்படி அவர் ரஷ்யாவை வற்புறுத்திக் கேட்டுக் கொண்டார்.

சுமார் 45 நிமிடம் நீடித்த அவரின் உரையில் செச்சினியா, பயங்கரவாதம், பொருளாதாரம் மற்றும் சமுகப் பிரச்சினைகள் இடம் பெற்றன. (து)

## விபத்தில் காயமடைந்தார்

(புலோலி)

கல்வி வலய சித்திரக்கல்வி அதிகாரி திரு.எஸ். சிவசுப்பிரமணியம்(றமணி) அலுவலகத்தில்இருந்து மோட்டார் சைக்கிளில்வீடுசென்றுகொண்டிருந்தபோதுவாகனம்மொன்றுடன் மோதி விபத்துக்குள்ளானார் அவர் பருத்தித்துறை அரசினர் ஆகாரவைத்திய சாலையில் தற்போது சிகிச்சை பெற்று வருகிறார். (சி-52)

## வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன!
### நல்லூர் சயன்ஸ் அக்கடமி
### அரியாலை றூபா அக்கடமி

ஆகியவற்றின் தரம் 4 முதல் O/L வரையும் A/L 2000 கலை வகுப்புகள் யாவும் நடைபெறுகின்றன: பெற்றோர்களின் வேண்டுகோளுக்கிணங்க.

O L :- 2K, தரம்: 5 பிரிவு 2 வகுப்புக்கள் தாவடிச் சந்தியில் சனி (10.6.2K) பி.ப :-3.00 மணிக்கு ஆரம்பமாகும். மானிப்பாய், சுதுமலை, ஆனைக்கோட்டை, நவாலி. கொக்குவில், இணுவில், தாவடி, மாணவர்கள தவறாது சமுகந்தரவும்.

இயக்குநர்
சரா

(857)

## கண்ணீர் அஞ்சலி
### அரியரட்ணம் சுந்தரநேசன்

எமது கல்லூரி ஆசிரியை திருமதி யோகேஸ்வரி சுந்தரநேசன் அவர்களின் அன்புக் கணவர் அகால மரணமடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் பங்குகொள்வதோடு, அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்,
மாணவர்கள்,
அலுவலக ஊழியர்கள்.
யா யாழ் இந்து மகளிர் கல்லூரி.

(865)

## இதய அஞ்சலி

யாழ் இந்து மகளிர் கல்லூரி
**திருமதி யோகேஸ்வரி சுந்தரநேசன்**
அவர்களின் அன்புக் கணவர்
**திரு. அரியரடணம் சுந்தரநேசன்**

அவர்கள் மாத்தறையில் அகால மரணமான செய்தி கேட்டு அதிர்ச்சியுற்றோம். அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது பாடசாலையின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யாழ் இந்து மகளிர் ஆரம்பப்பாடசாலை.

(856)

நயினாதீவு

## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
### புதிய சித்திரத் திருமஞ்சம் வெள்ளோட்ட விழாவும்
### கலைஞர்களை கௌரவித்து பாராட்டும் விழாவும்
### 11 - 06 - 2000

அம்பிகை அடியார்களே!

நிகழும் விக்கிரம வருடம் வைகாசி மாதம் 29-ம் நாள் (11-06-2000) ஞாயிற்றுக்கிழமை தசமி திதியும் அத்த நட்சத்திரமும், அமிர்த சித்தயோகமும் கூடிய காலை 8.52 முதல் 10.22 வரையுள்ள சுபவேளையில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள சித்திரத் திருமஞ்சத்தின் வெள்ளோட்டமும், சிற்பக்கலையர்களை கௌரவித்து பாராட்டும் விழாவும் அறங்காவலர்சபைத் தலைவர் திரு. கா. சு. தியாகராசா அவர்களின் தலைமையில் நடைபெறும். அடியார்கள் அனைவரையும் வருகை தருமாறு வேண்டிக் கொள்ளுகிறோம்.

சித்திர திருமஞ்சத்தை சிறப்புற தலைமை தாங்கி நிர்மாணித்த ஸ்தபதியார்

**அராலியூர் சிற்பகலைஞர், சிற்பகலாவிநோதன்**

**உயர்திரு. சின்னத்தம்பி அமரசிங்கம்** அவர்களும்குழுவினரும்

அறங்காவலர் சபையினர்,
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்.

நயினாதீவு, 10-06-2000

(842)

## தேடுகின்றோம்

மீசாலை மேற்கு கேணியடி ஒழுங்கையில் வசிக்கும் வீடமைப்பு அதிகாரசபையின் உபவேலைப் பரிசோதகர் (பளைப்பிரிவு) திரு. செல்லம் புஸ்பநாதன் அவர்களின் மனைவி பிள்ளைகளின் இருப்பிடத்தை அறியத்தரவும்.

க. சின்னராசா
''ஈஸ்வரவாசம்''
மயிலணி, சுன்னாகம்.

(854)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### அரியகுட்டி பொன்னுத்துரை

தோற்றம் 05-06-1917 மறைவு 10-06-1999

திதி:- ஏகாதசி:- 29-06-2000

அன்பின் திருவுருவாய் அணையா ஒளி விளக்காய் இருந்து எமக்கு வழிகாட்டிய அன்புத் தெய்வமே ஆண்டுகள் பல சென்றாலும், ஆறாது எம்துயர். உங்கள் அன்பு முகத்தை எப்போது காண்போம் இனி, உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல காளியம்மனை பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் துயரால் வாடிவதங்கும்

ஊரெழு மேற்கு,
சுன்னாகம்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(830)

## கண்ணீர் அஞ்சலி



### இரத்தினக்குருக்கள் சுப்பிரமணியக்குருக்கள்

வண்ணை ஸ்ரீ விஸ்வலிங்கப் பிள்ளையார் ஆலய பரம்பரை பிரதம குரு இ. சுப்பிரமணியக் குருக்கள் மல்லாவியில் சிவபதமெய்துவிட்ட செய்தி கேட்டு ஆழ்ந்த வேதனையும் அதிர்ச்சி அடைகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

வண்ணை ஸ்ரீ விஸ்வலிங்கப் பிள்ளையார்
கோயிலடி வாழ்மக்கள்.

முருகமூர்த்தி வீதி,
வண்ணை வடமேற்கு,
யாழ்ப்பாணம்.

(851)

## ஆனந்தா வித்தி கோண்டாவிலில்

அரியாலை மேற்கு யா/ நல்லூர் ஆனந்தா வித்தியாலயம் யா/ கோண்டாவில் சி. சி. த. க பாடசாலையில் இயங்குகிறதெனவும் தரம் ஐந்து மாணவர்களை சமுகமளிக்குமாறும் அதிபர் ஆ. இரத்தினசிங்கம் கேட்டுள்ளார்.

## போதனாசிரியர் நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணவலயக்கல்வித்திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவினால் கடந்தமாதம் 22 ஆம் திகதி நடாத்தப்படவிருந்த போதனாசிரியர் பதவிகளுக்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 13 ஆம் திகதிகாலை 10 மணிக்கு யாழ். கொக்குவில் இந்துக்கல்லூரியில் நடைபெறுமெனவும், இந் நேர்முகத்தேர்வுக்கென அழைக்கப்பட்ட அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார்.

(க-14)

## ஒய்வூதிய வவுச்சர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ஒய்வூதியர்களின் ஜூன்மாத ஒய்வூதிய வவுச்சர்கள் அந்த ஒய்வூதியர்கள் ஒய்வூவுதியம் பெறும் வங்கிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் அங்கு சென்று அவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (சி)

## செஞ்சிலுவை வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

பின்வருவோரை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

க. சதாசிவம் (சிறுப்பிட்டி கிழக்கு நீர்வேலி), நல்லதம்பி சிவானந்தன் (கல்வயல் சாவகச்சேரி), மயில்வாகனம் தவமணி (நுணாவில் சந்தி சாவகச்சேரி), வேலாயுதம் ருக்மணி (ஜி.எஸ் ஒழுங்கை பருத்தித்துறை வீதி கொடிகாமம்). (க-7)

## ஆத்ம சுகம் அளிக்கும்

(யாழ்ப்பாணம்)

சிவநெறி விரத ஆத்மார்த்தமாக உழைத்து அதற்காகவே தன் வாழ்வை அர்ப்பணித்வர் சேக்கிழார் பெருமான் ''பெரியபுராணம்வாழ்வின் திவ்ய நிலைக்கு வழி கோலும் அற்புதத் தன்மையிலானது'' என்று சிவத்தமிழ்ச் செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி தெல்லிப்பளை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தில் நடைபெற்ற சேக்கிழார் பெருமான் குருபூசையில் அருளுரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

''இன்று மக்கள் மனதில் இன்னோரன்ன வகைகளில் எல்லையற்ற துன்ப துயரங்கள் சூழ்ந்து கொண்டுள்ளன. இத்தகைய வேதனை நிலை மாற்றிட நாமனைவரும் சமய நெறிவழுவாது மனிதாபிமானத்துடன் ஒருவருக்கொருவர் உதவிட செய்து தூய்மை பிறழாது எம் வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டும்.

ஒருவர் துயரில் பங்கேற்று அதன் நிவர்த்திக்குப் பாடுபடுகையில் கிடைக்கும் ஆத்ம சுகம் அலாதியானது. இந்த வகையில் இறையருள் பெற்றிட நமக்கெல்லாம் மிகுந்த பயன் தரும் பொக்கிஷம் சேக்கிழார் பெருமான் அருளிச் செய்த பெரிய புராணமாகும் என்றும் அவர் மேலும் சொன்னார்.

(இ)

## IBMS
## CENTER FOR COMPUTER TRAINING

எமது நிறுவனத்தில் கல்வி பயிலும் அனைத்து மாணவர்களும் 10. 06. 2000 (சனிக்கிழமை) காலை 10. 00 மணிக்கு தலைமைக் காரியாலயத்தில் ஒன்று கூடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

குறிப்பு:- மிக முக்கியமான விடயங்கள் ஆராயப்பட இருப்பதால் தவறாது சமுகமளிக்கவும்.

701 K. K. S ROAD, JAFFNA. Director (Ad)
(C-458)

## சுகாதார சேவைத் திணைக்களத்தின் பதவிகளின் பொருட்டு (Para Medical)
## இடைநிலை வைத்தியப் பயிலுனர்களை ஆட்சேர்ப்பதற்கான போட்டிப்பரீட்சை 2000

மேற்படி பரீட்சை 18. 06. 2000 திகதி யாழ்ப்பாணம் தாதியர் பயிற்சிப்பாடசாலையில் நடைபெறும். இப்பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் அனுமதி அட்டைகளை யாழ். போதனா வைத்திய சாலையில் வந்து பெற்றுக் கொள்ளவும்.

**Director**
**Teaching Hospital**
**JAFFNA.**

[C-461]

## அறிவித்தல்

யா/சென் பெனடிற் றோ. க. த. க. வித்தியாலயம் 12-06- 2000 திங்கட்கிழமைமுதல் காலை 8.00-1.00 வரை கே. கே.எஸ். வீதி கொக்குவிலில். யா/பெரியபுலம் மகா வித்தியாலயத்தில் இயங்கும் . ஆசிரியர்களும், மாணவர்களும் தவறாது சமுகம் தரவும்.

அதிபர்
யா/சென் பெனடிற்,
றோ. க. த. க. வி.

(844)

## சந்திக்கவும்

எமது ''நியூ வீணா கானம்'' இசை மன்ற மாணவர்கள் சந்திக்கவும்.

வாசுகிரங்கன் அல்லது ''மகேந்திர மாளிகை''
60, வைமன் வீதி, நல்லூர்.
மீலாட்டன் வீதி, மானிப்பாய்.

[846]

## கண்ணீர் அஞ்சலி

07-06-2000 அன்று காலமான எமது பாடசாலை ஆசிரியை

திருமதி கலைவாணி ஜெயதாஸ்

அவர்களின் அருமைத் தந்தை

### அமரர் செல்லர் பாலசுப்பிரமணியம்

அவர்களின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
யா/ கோண்டாவில் இந்து ம. வி

(834)

## கண்ணீர் அஞ்சலி

வண்ணை ஸ்ரீ பேச்சியம்மாள் ஆலய முன்னாள் பிரதம குருவும் ஆலய பூசகர் பாலகணேசசர்மாவின் அன்புத் தந்தையாரும் ஆகிய

### இ. சுப்பிரமணியக் குருக்கள்

மல்லாவியில் சிவபதமெய்தி விட்டார். இச் செய்தி கேட்டு ஆழ்ந்த வேதனையும் அதிர்ச்சியும் அடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றோம்.

பேச்சியம்பாள் தேவஸ்தான,
அறங்காவலர் சபை.

(840)

உடுக்கை இழந்தவன் கை போல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு
- குறள்

# வலம்புரி

## சிந்தனைகள் செயற்பாடுகள் எதுவரை

மண்ணிலே சமாதானம் மலரும் வரை தான் எங்கள் மக்களைப் பற்றிச் சிந்திப்பதும், செயற்படுவதும் ஆதலால் அவர்கள் படும் அவலங்களை தாபபடும் அவலமென நல்ல உள்ளங்கள் சிந்திக்க வேண்டுகின்றோம். எண்ணி எண்ணி வருடங்கள் பறந்தோடி விட்டன. சமாதானத்தைப் பற்றி, தூரம் தொடுவானமாகி விடக்கூடாதென்பதே துயரப்படும் உள்ளங்களின் அங்கலாய்ப்பு.

இத்தகைய அவல வாழ்வுக்கு அரசியல் தில்லுமுல்லுகள் - ஏமாற்று இழுத்தடிப்புக்களே காரணம். எய்த்து வஞ்சிக்க அப்பைநோகின்ற நிலையில் யாரும் புழுங்கிக்கொள்ளக் கூடாது. நேர்மை நிதானம் செயல்திறன் உறுதிப்பாடு காலத்துக்குக் காலம் மாறாக் கருத்துக்கள் கிளர்ந்தெழுமானால் நிலைத்து நிற்குமானால் சமாதானம் எங்கள் கரங்களில் தவழும் நாள் வெகு தொலைவில் இல்லை.

பொறுமை கடைப்பிடிக்கும் அதே வேளை உண்மையை உணரவைக்கும் உத்தியும் உதயமாக வேண்டும். இடிப்பாரை இல்லா ஏமரா மன்னன் பற்றியும் இடிக்கும் துணையாரைப் பற்றியும் தமிழ் வேதம் சாற்றிய உண்மைகள் மனத்தடங்கண் தோன்றுகின்றன. தன் நெஞ்சறிவது பொய்யற்க என்ற கோட்பாட்டை ஆள்பவர்கள் கடைப்பிடித்தால் அவலங்கள் தீரும். அந்நியோன்யம் பெருகும்.

அரச நிர்வாகிகள் அவலப்பட்டேங்கும் மக்களுக்கு திறந்த மனதோடு உதவ வேண்டும். அடையா நெடுங்கதவு அஞ்சலென்ற சொல்லும் உடைய சடையப்ப வள்ளலை எண்ணிப்பார்க்க வேண்டும். மன்னனை நெருக்காவிட்டாலும் அரசியலில் தோயாவிட்டாலும் அணைக்கும் கரங்களின் அணையா விளக்காக விளங்கினான்.

செழுங்கிளை தாங்குதல் பற்றி எங்கள் பண்பாட்டு முதிர்ச்சி பேசும். அவை சொல்லிலே மட்டும் இருக்காது செயலிற் காட்டி சேவைமனப்பாங்கொடு உழைக்க வேண்டிய தேவை இருக்கும் காலம் இது. இக்காலத்தின் தேவையுணர்ந்து மனிதம் நிரம்பிய மக்களாய் மிளிர்வோம். மண்ணில் அவலத்தை சமாதானம் மலரும் வரை போக்க விரைந்து செயற்படுவோம்.

அன்புடன் ஆசிரியர்

## கேட்போர் கூடத்தில் இயங்குகின்றது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாசத்தினதும் யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தினதும் பணியாளர்கள் யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவு சங்கத்தின் கேட்போர் கூடத்தில் தத்தமது வழமையான கடமைகளைச் செய்து வருவதாக சமாசவட்டாரங்கள் தெரிவித்தன. (வ)

## கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சியில் இருந்து இடம்பெயர்ந்து சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் தங்கியிருக்கும் ஓய்வூதியம் பெறுவோரைத் தமது வங்கி புத்தகங்களுடன் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்கு சமுகமளிக்குமாறு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் கோரியுள்ளார்.

(120, 12சி)

## சுண்டுக்குழியில் ஒருவர் கைது!

(யாழ்ப்பாணம்)

சுண்டுக்குழி மகளிர் பாடசாலைக்கு அருகாமையில் வைத்து கடந்த சனிக்கிழமை 3-ம் திகதி இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டு 512 படைப்பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

நடராசா றெஜிக்காந் (18 வயது) ஆனந்தபுரம் புதிய செம்மணி வீதி, யாழ்ப்பாணம் என்ற இடத்தைச் சேர்ந்தவர் இவர்.

இதேவேளை கடந்தமாதம் 28-ம் திகதி வல்வெட்டித்துறை கடற்கரை பகுதியில் வைத்து 33 வயதுடைய இராமையா மகேஸ்வரன் ஆதிகோவிலடி வல்வெட்டித்துறை) என்பவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவர்கள் இருவரும் காங்கேசன் தடுப்பு முகாமில் வைக்கப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

(12 - சி)


### இன்று ஆரம்பப்

பிரத்தியேக வகுப்புக்கள்

பௌதீகவியல்

திரு. கருணாநிதி
(B.Sc Spe)

2001 — A/L
2002 A/L
மதியம் 1மணி

[867]



University of Jaffna.
Discussion.

A discussion on conducting the First semester examination of Postgraduate Diploma in Public Administration will be held on 17th June 2000 (Saturday) at 10-00 A.M at the Office of the Dean / Faculty of Graduate Studies. Candidates are requested to participate in the discussion.

Registrar,
University of Jaffna.
2000-06-07

(C 460)


# இனப்பிரச்சினை தீர்வில் இந்தியா பல நாடுகளின் உதவி கோருகிறது

## பி. ஜே. பி பொதுச்செயலர் தெரிவிப்பு

(புதுடில்லி)

இலங்கை இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக இந்தியா வேறு பல நாடுகளின் உதவியை கோரியிருப்பதாக பாரதீய ஜனதாக் கட்சியின் பொதுச் செயலர் வெங்கட நாயுடு தெரிவித்துள்ளார். விஜயவாடாவில் அண்மையில் பத்திரிகையாளர் மத்தியில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்; இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு காண அதிகாரப் பரவலாக்கலே ஒரே வழி என்றும் இலங்கையின் ஒருமைப்பாட்டிற்கும் இறைமைக்கும் உட்பட்டு இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்றார்.

இலங்கையில் இந்தியாவின் இராணுவத்தலையீடு எதுவும் இராது என்றும் அவர் திட்டவட்டமாக தெரிவித்தார்.

இலங்கைப் பிரச்சினையில் தீர்வுகாண தனது ராஜீய தொடர்புகளை இந்தியா வலுப்படுத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார் (வ-க)

## 'காஸ்'; பாவனை பொருள் விலை உயர்வு எதிர்த்து உறுப்பினர்கள் வெளிநடப்பு!

(கொழும்பு)

''காஸ்'' விலை அதிகரிப்பு, மற்றும் பாவனைப் பொருட்களின் விலை அதிகரிப்புக்களை எதிர்த்துமேல்மாகாண சபை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபைக் கூட்டத்தில் இருந்து வெளிநடப்பு செய்தனர்.

ஐக்கிய தேசியக்கட்சி மேல்மாகாணசபை உறுப்பினரும் எதிர்க்கட்சித்தலைவருமான கரு ஜயசூரிய தலைமையில் ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர்கள் சபையைவிட்டு வெளிநடப்புச் செய்தனர்.

இவர்களுடன் ஜே. வி. பி, ஐ. தொ. காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும் சேர்ந்து மொத்தமாக 35 உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது: 'காஸ்'. மற்றும் பாவனைப் பொருட்களின் விலை அதிகரிப்புத் தொடர்பாக விவாதம் நடத்தக்கோரி எதிர்க்கட்சியினர் கோரிக்கை விடுத்ததை ஏற்காமையினாலேயே இவர்கள் வெளிநடப்புச் செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

## சந்திக்கவும்

(யாழ்ப்பாணம்)

கைதடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது காவலாளர் சங்கத்தின் அங்கத்தவர்கள் யாழ் நகரசபை ஊழியர் எவராயினும் வேலை செய்த சம்பளம் இதுவரை அரசாங்கத்தால் வழங்கப்படவில்லையாயின் தங்கள் ஆவணங்களுடன் 12-06-2000 திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு 131, ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள இந்திரா ஹாட்வெயர் என்ற இடத்தில் சந்திக்குமாறு சங்கத்தின் தலைவர் கேட்டுள்ளார். (ச)

## கடனுதவி

[யாழ்ப்பாணம்]

மட்டுவில் தெற்கு சனசமூக நிலையம் இடம்பெயர்ந்து பல்வேறு பகுதிகளிலும் வசித்துவரும் தமது நிலையப் பிரதேசத்தில் வசித்த நிலைய அங்கத்தவர்களுக்குசிறுகடனுதவி வழங்கத் தீர்மானித்துள்ளது. இத் தகவலை நிலையத் தலைவர் திரு ச. கிருஷ்ணன் தெரிவித்துள்ளார். (சி)


## நயினைப்பதியாளே நமக்கொரு தீர்வினைத் தா!

எத்தனை இடர்கள் சூழ்ந்ததம்மா
எந்நாளில் இத்தனையும் தீருமம்மா
நித்தமும் உன்னை பணிவோமம்மா
நிரந்தர தீர்வினைத் தருவாயம்மா

மதுரகவி. காரை. எம். பி. அருளானந்தன்
(இன்று நயினை நாகபூஷணி அம்பாளின் 10ம்திருவிழா)


## கூட்டணிக் கட்சிகளுக்கிடையில் ஒழுங்கும் கட்டுப்பாடும் அவசியம்

### பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ்

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக கருத்துத்தெரிவிப்பதற்கு தேசிய ஜனநாயகக் கூட்டணியின் உறுப்புக்கட்சிகளுக்கு உரிமையுண்டு ஆனால் அதன் செயல்பாட்டில் ஒழுங்கும் கட்டுப்பாடும் இருக்கவேண்டுமென்று மசதாக்கட்சித் தலைவரும், பாதுகாப்பு அமைச்சருமான ஜோர்ஜ் பெர்னாண்டஸ் சென்னை விமானநிலையத்தில் செய்தியாளர்களிடம் கூறினார்.

அவர் மேலும் செய்தியாளர்மத்தியில் தெரிவித்ததாவது இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக கருத்துக்களைச் சொல்வதற்குளவருக்கும் தணிக்கை கிடையாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (வ)


BITSMANS

கல்விநிறுவனம் மானிப்பாய்

அனேக மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க

புதிய பிரிவு O/L DAY CLASS

எமது வழமையான ''SUPER GRADE'' ஆசிரியர் குழு

ஆரம்பம் 12-6-2000 திங்கள் காலை 8-00

(859)



## அறிவித்தல்

### வளர்மதி சனசமூக நிலையம் - மட்டுவில்

### இடம்பெயர்ந்தவருக்கான கடனுதவி வழங்கல்

நாட்டின் தற்காலிக அசாதாரண சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்து யாழ் மாவட்டத்தின் பல்வேறு பிரதேசத்திலும் வாழும் எமது நிலைய எல்லைப் பிரதேசத்தில் வசித்த எமது நிலைய அங்கத்தவர்களுக்கு சிறு கடனுதவி வழங்க எமது நிர்வாகம் தீர்மானித்துள்ளது. இக் கடனுதவி தனி ஒரு அங்கத்தவரைக் கொண்ட குடும்பத்திற்கு 1000 ரூபாவாகவும் ஒன்றுக்கு மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பத்திற்கு 2000 ரூபாவாகவும் அமையும். இக்கடனுதவியை பெற விரும்புவோர் பின்வரும் கால அட்டவணைக்கு ஏற்ப பெற்றுக் கொள்ளவும்.

| தற்காலிக வசிப்பிடம் | காலம் | கடனுதவி பெறும் இடம் |
|---|---|---|
| ★ சங்கானை, மானிப்பாய், பண்டத்தரிப்பு, நவாலி, இளவாலை, ஆனைக்கோட்டை | 10.6.2000 சனி காலை 9.00 - 12.00 | திருமதி தேவராசா செங்கமலம் அவர்கள்வசிக்கும் வீடு (சங்கானை) |
| ★ உரும்பிராய், கோண்டாவில் கொக்குவில், ஊரெழு, இணுவில் | 10.6.2000 சனி பிற்பகல் 3.00 - 5.00 | திரு. ச. கிருஷ்ணன் அவர்கள் வசிக்கும் வீடு (உரும்பிராய்) |
| ★ மல்லாகம், சுன்னாகம், மருதனார்மடம், ஏழாலை | 11.6.2000 ஞாயிறு காலை 9.00 - 11.00 | திரு. செ. இந்திரன் அவர்கள் வசிக்கும் வீடு (மல்லாகம்) |
| ★ புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி | 11.6.2000 ஞாயிறு பிற்பகல் 3.00 - 5.00 | திரு. மா. சுப்பையா அவர்கள் வசிக்கும் வீடு (புத்தூர்) |
| ★ வடமராட்சி | 12.6.2000 திங்கள் காலை 9.00 - 12.00 | திரு. பொ. தேவராசா அவர்கள் வசிக்கும் வீடு (பொலிகண்டி) |

குறிப்பு:- குடும்பத் தலைவன் அல்லது தலைவி குறித்த நேரத்தில் சமுகம் தந்து இக்கடனுதவித் தொகையை பெற்றுக்கொள்ளவும்.

நிர்வாகம்

(843)

## இலங்கையின் ஒற்றுமை இறையாண்மை பாதுகாக்கப்பட வேண்டுமென்ற மத்திய அரசின் கொள்கைசரியானது

(சென்னை)

இரத்மலானை குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் சி.வி.குணரத்தினாவின் படுகொலைச் சம்பவம் குறித்து மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழக பொதுச் செயலாளர் வை. கோபாலசாமி கண்டித்துள்ளார்.

கோயம்புத்தூரில் செய்தியாளர்கள் மத்தியில் பேசும் போதே வை. கோபாலசாமி இக் கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

அவர் செய்தியாளர்களிடம் பேசும் போது மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

இலங்கையின் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் ஆயுதப் போராட்டம் நடைபெறாவிட்டால் இந்தப் பிரச்சினை உலக அரங்கிற்கு வந்திருக்க முடியாது என்றும், இப் பிரச்சினையில் ஐ.நா.வுக்கும் பங்கு இருக்கிறது என்றும், எனினும் அதற்கான சந்தர்ப்பம் இப்போது எழவில்லை என்றும் கூறினார்.

தமிழக முதல்வர் மு. கருணாநிதி கூறிய செக்கோசிலவாக்கியா முறையிலான தீர்வுமுறை சிறந்தது என்றும் ம.தி.மு.க. தேசிய ஜனநாயகக்கூட்டணியின் உறுப்புக்கட்சி என்றமுறையில் வாஜ்பாய் அரசின் முடிவுக்குக் கட்டுப்படும் என்றும இலங்கையின் ஒற்றுமையையும், இறையாண்மையையும் பாதுகாக்கப்பட வேண்டுமென்ற நிலைப்பாடு மத்திய அரசின் சரியான கொளகை முடிவு என்றும் அவர் தெரிவித்துள்ளார். (வ)

## இலங்கையில் ஒருமையும் ஒற்றுமையும் நீடிக்கப்பட வேண்டும்

### மத்திய அரசு தீர்மானம்

(புதுடில்லி)

இலங்கையில் ஒற்றுமையும் ஒருமைப்பாடும் தொடர்ந்து நீடிக்கப்பட வேண்டுமென்ற நிலையில் எந்தவிதமான மாற்றமும் இல்லை என்று இந்திய மத்திய அரசின் பாதுகாப்பு சம்பந்தமான குழு இலங்கைப்பிரச்சினை சம்பந்தமாக ஆராய்ந்து முடிவு எடுத்துள்ளது.

பிரதமர் வாஜ்பாய் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் தி.மு.க.வின் நாடாளுமன்றக் குழுவின் தலைவரும் மத்திய வர்த்தகம் தொழில் அமைச்சருமான முரசொலி மாறன் சிறப்பு அழைப்பின் பேரில் கலந்து கொண்டார்.

இந்தக் கூட்டத்தின் பின், பத்திரிகையாளர் மத்தியில் பேசும் பொழுது மத்திய அரசின் இன்றைய நிலைப்பாட்டை ஆதரிப்பதாகவும், மத்திய அரசில் இடம் பெற்றுள்ள கட்சி என்ற வகையில் அதன் முடிவில் தி.மு.க.வுக்கு உடன்பாடு உள்ளது என்றும் முரசொலி மாறன் கூறினார். (வ)

### தனிநாட்டு...

பரவலாக்கத்தை மேற்கொண்டு அரசியல் தீர்வைக் காணலாம் என பேட்டி ஒன்றில் கூறியிருந்தார்.

தனிநாட்டுக் கோரிக்கைக்குப் பதிலாகஅதற்கு நிகரான மாற்றுத் திட்டத்தை முன்வைக்கலாம். இல்லாவிடில் சர்வதேச சமூகத்தின் நிலைப்பாடும் மாறலாம். எனவே பொதுமக்கள் நெருக்கடியை கருத்தில்க் கொள்ள வேண்டும் என்று சம்பந்தன் மேலும் தெரிவித்தார்–

### தபால் விநியோகம் ஆரம்பம்

கடந்த புதன் கிழமை கப்பலில் எடுத்து வரப்பட்ட 114 தபாற் பொதிகளும் தரம் பிரிக்கப்பட்டு விநியோகம் ஆரம்பமாகி விட்டதென யாழ் தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

### வயோதிப...

மீசாலைவடக்கைச் சேர்ந்த பூதத்தம்பி சின்னப்பிள்ளை என்பவரே மரணமானவராவர் இவரது சடலம் யாழ், போதனாவைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (க-12)

### இராணுவத்துக்கும்...

12 பேர் காயமடைந்ததாகவும் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை இம்மோதலின்போதுவிடுதலைப்புலிகள் தரப்பில் ஆறுபேர் கொல்லப்பட்டுள்ளதாகவும் அரசஅறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது (வ)

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் சின்னப்பிள்ளை

மீசாலை வடக்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் சின்னப்பிள்ளை 08-06 2000 அன்று காலமானார்.

இவர் ஸ்ரீமுருகன் (பிரான்ஸ்), பன்னீர்செல்வம் (ஜேர்மனி), இராஜேந்திரன் (பவா பிரான்ஸ்), ரவீந்திரன் (மீசாலை), கஜேந்திரன் (பிரான்ஸ்), சந்திரா (கொலன்ட்), சாரதா (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், கமலாதேவி (ஜேர்மன்), இராசாத்தி [பிரான்ஸ்], ஸ்ரீஸ்வரன் (கொலன்ட்), வாகீசன் (கொலன்ட்), கீதா (மீசாலை), ஆகியோரின் மாமியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் சிறுப்பிட்டி மேற்கில் 10-06-2000இன்றுகாலை10மணியளவில்நடைபெற்று இந்துசிட்டி மயானத்தில் தகனம் நடைபெறும் இதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தற்போதைய முகவரி
ஞானவைரவர் கோயிலடி
சிறுப்பிட்டி மேற்கு

தகவல்
சு.ரவீந்திரன்
(மகன்)
(560)

இப்பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம். எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000ஆம் ஆண்டு யூன் மாதம் 10-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது

## பதுக்கிவைக்கப்பட்ட 1600 லீற்றர் பெற்றோல் கண்டுபிடிக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தி பெற்றோலுக்கு தட்டுப்பாடுள்ள நிலையில் பெற்றோல் பாவனையாளர்களுக்கென வழங்கப்பட்ட பெற்றோலில் சுமார் 1600 லீற்றர் பெற்றோலை பரல்களில் வெவ்வேறு இடங்களில் பதுக்கி வைக்கப்பட்டிருந்தது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

வலிகிழக்குப் பகுதியில் உள்ள பலநோக்குக்கூட்டுறவுச்சங்கம ஒன்றிலேயே இப்பதுக்கல் சம்பவம் நடைபெற்றுள்ளதாக தெரிவிக்கமபடுகிறது.

இப்பதுக்கல் சம்பவம் தொடர்பாக கிடைக்கப் பெற்ற தகவலை அடுத்து யாழ். கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் மேற்கொண்ட துரிதநடவடிக்கையினால் இப்பதுக்கல் அம்பலத்திற்கு கொண்டுவரப்பட்டது.

பதுக்கப்பட்ட 1600லீற்றர் பெற்றோலும் யாழ் அரச அதிபரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சங்கத்தின் இப்பதுக்கல் நடவடிக்கையால் சங்க அங்கத்தவர்கள் மத்தியிலும் பாவனையாளர் மத்தியிலும் அதிருப்த்திநிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது. (ச-07)

## அவசரகால நிலை மேலும் ஒருமாதம் நீடிக்கப்பட்டது

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிக்கும் பிரேரணை பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க கட்சி உறுப்பினர்கள், ஈ.பி.டி.பி. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஆகியவற்றின் பிரதிநிதிகள், பிரேரணைக்கு ஆதரவாகவும், ஐக்கியதேசியகட்சி தமிழர் விடுதலைக் கூட்டணி என்பவற்றின் பிரதிநிதிகள் மற்றும் வாசுதேவ நாணயக்கார நிஹால் கலப்பதி ஆகியோர் பிரேரணைக்கு எதிராக வாக்களித்தார்கள். (வ-4)

## இடம்பெயர்ந்தோருக்கு நிவாரணக் கிளைகள்

யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவில் இருந்து இடம்பெயர்ந்து வலிகாமம் பகுதியில் முகாம்களிலும் வீடுகளிலும் உள்ள மக்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்குவதற்கு யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஒன்பது விற்பனைநிலையங்களைத் திறந்துள்ளது.

சண்டிலிப்பாய்ச் சந்தி, சுழிபுரம், பண்டத்தரிப்புச் சந்தி, சுதுமலை அண்ணாமலை வீதி, அடைக்கல மாதா கோவில் ஆனைக்கோட்டை, உயரம்புலம் ஆனைக்கோட்டை, மூத்த விநாயகர் ஆனைக்கோட்டை, நவாலி அரசடி ஆகிய இடங்களிலேயே கிளைகள் திறக்கப்பட்டுள்ளன. [வ]

## இன்று முக்கிய கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை, குருநகர் ஆகிய இடங்களிலிருந்து இடம் பெயர்ந்து நல்லூர் பிரதேசசபை எல்லைக்குள் வசிப்போர் பற்றியமுக்கிய கலந்துரையாடல் ஒன்று மேற்படி பிரதேசசபையின் சொக்குவில் நூலகசேவைக் கட்டடத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30மணியளவில் இடம் பெறவுள்ளது.

நல்லூர் பிரதேசசபைத் தலைவர் க.மணிபல்லவராஜன் தலைமையில் இடம் பெறும் மேற்படி நிகழ்வில் நூலகஅபிவிருத்திகள் சம்பந்தப்பட்டமுக்கிய விடயங்களும் இடம பெறவுள்ளது.(க

## இருவர் காயம்

(வவுனியா)

தென்மராட்சிப் பகுதியில் பரவலான எறிகணை வீச்சினால் காயமடைந்த இருவர் விபரம் வருமாறு.

மட்டுவில் வடக்குசாவகச்சேரியைச் சேர்ந்தவர்களான ஆறுமுகம் இராசையா(வயது 75) சிவகடாட்சம் அபிராமி (வயது19). (ச 07

## ★ கூட்டுறவுச் சங்கங்களில் 1 கிலோ சீனி 32.50 சதத்திற்கு மேற்படாமல் விற்பனை செய்யலாம்

யாழ், மாவட்டத்திலுள்ள பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்கள் ஒரு கிலோ வெள்ளைச்சீனியை 32.50 சதத்திற்கு மேல் விற்பனை செய்யக்கூடாது என கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ.கு. சண்முகநாதன் சங்கங்களுக்கு அறிவித்துள்ளார்.

ஒரு கிலோ சீனியை 32,50 சதத்திற்குமேல் எந்தவொரு சங்கமும் விற்பனை செய்தால் அது தொடர்பாக கூட்டுறவு அபிவிருத்தித்திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் பாவனையாளரைக் கேட்டுள்ளார். (வ]

### குண்டு வெடிப்பு...

கொல்லப்பட்ட ஒவ்வொருவரின் சார்பிலும் இரண்டு லட்சம் ரூபா வழங்கப்படவுள்ளது. கொல்லப்பட்டவர் அரசாங்கஉத்தியோகத்தராக இருந்தால் மூன்று லட்சம் ரூபா வழங்கப்படவுள்ளது.

இக்குண்டுவெடிப்பில் காயமடைந்தவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாவும், அவர் அரசாங்க உத்தியோகத்தராக இருந்தால் ஒரு லட்சம் ரூபாவும் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

### குடும்ப ---

சேர்ந்த திருமதி ப. சிவக்கொழுந்து (வயது 56) என்பவரே பலியானவராவார்.

1996ஆம் ஆண்டு இப்பகுதியில் ஏற்பட்ட அழுக்கவெடி விபத்தில் இப் பெண்ணின் மகன் உடல் சிதறிப் பலியானதும் குறிப்பிடத்தக்கது. (ச-57)

### சமுகம் தரவும்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய உற்சவம் குறித்து ஆராய்வதற்கு சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் அனைத்துத் தொண்டர்களையும் நாளை பிற்பகல் 2 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரியில் இயங்கும் இடம்பெயர்ந்தோர் சிகிச்சை முகாமுக்கு வருகைதருமாறு மாவட்ட ஆணையாளர் செல்வாஞ்சன்கேட்டுள்ளார்.

### மொறட்டுவ..

மேலதிக விசாரணைகளுக்காக தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளர் என்று பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இக்குண்டு வெடிப்புத் தொடர்பாக பல்வேறு விசேட பொலிஸ் குழுக்கள் விசாரணைசெய்து வருகின்றனர். (வ)

### அமைச்சர்..

அனுதாபச் செய்தியில், நாட்டின் சமாதானத்திற்கும் சுபிட்சத்திற்கும் அமைச்சர் குணரத்தினாபெரும் பங்காற்றியிருந்தார்.

இச் சமயத்தில் அமைச்சரின் மறைவு நாட்டிற்கு பேரிழப்பாகும் அமைச்சர் எக்காரணத்துக்காக உயிரைத் தியாகம் செய்தாரோ, அதே சமாதானத்தை அடைய வேறுபாடுகளை மறந்து அனைவரும் ஒத்துழைப்புடன் கருமம ஆற்ற வேண்டுமென்று பிரதமர் கூறினார்.

### அமைச்சரின்...

பூதவுடல்கள் பாராளுமன்றத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் இறுதிக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும் என்றும் அமைச்சருக்கு கௌரவம் அளிக்கும் முகமாக கொழும்பு மாவட்ட சகல அரச ஸ்தாபனங்களும் தேசிய கொடியை அரைக் கம்பத்தில் பறக்க விடும்படி பொது நிர்வாக அமைச்சு கேட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ-ச)

### தடுத்து...

நீதவான் உத்தரவிட்டார்.

பருத்தித்துறை நீதிமன்றத்தில் மாவட்ட நீதவான் திரு. எஸ்.ஏ.ச. ஏகநாதன் முன்னிலையில் இக்கொலை வழக்கு விசாரணை செய்யப்பட்டு வருகின்றது.

இவ்வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது இக்கொலை வழக்கு சந்தேகநபரான உபயகதிர்காமத்தைச் சேர்ந்த சின்னத்துரை சந்திரகுமாருக்கு நீதிமன்றம் இவ்வாறு உத்தரவிட்டது (க-52)

ஸ்ரீ செல்வா
யாழ்ப்பாணம்
விஜய் ஜோதிகா
நடித்த
குஷி
10மணி காட்சி மட்டுமே
(ப.நே)
(இ-466)

நாகம்ஸ்
சுன்னாகம்
விஜய், ஷாலினி யின்
கண்ணுக்குள் நிலவு
(ரீல்ஸ்)
10.30 - 2.30 [பு.நே]
(இ-462)